அலகு

# 12

# செவிலியக் கல்வி மற்றும் மேலாண்மை

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் காற்றறிந்தார்

சிறந்த நூல்களைக் கற்று அவற்றின் பொருளை செம்மையாக உணர்ந்தவர் தாம் இன்புறுவதோடு உலகமும் இன்புறக் கண்டு மேன்மேலும் கற்கவும் கற்பிக்கவும் விரும்புவர்.

## கற்றல் நோக்கங்கள்

இப்பாட இறுதியில் மாணவர்கள் அறிந்து கொள்பவை

- செவிலியக் கல்வியின் வரையறையை விளக்குதல்
- செவிலியக் கல்வியின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- செவிலியக் கல்வி பாடத்திட்டத்தை திட்டமிடுதல்
- மருத்துவமனை படுக்கை தொகுதி (அ) வார்டு மேலாண்மைக்கான கொள்கைகள்
- வார்டு மேலாண்மையில் செவிலிய மேலாளரின் குணங்கள்

XIG53

## முன்னுரை

கல்வி என்பது "செவிலியத் தொழிலின் அடித்தளம்" நோயாளி சார்ந்த கல்வி மற்றும் செவிலியருக்கானக் கல்வி இவ்விரண்டையும் உள்ளடக்கியதே நலக்கல்வி, இவ்விரண்டு பிரிவுகளே செவிலியருக்கு ஆர்வத்தைத் தூண்டக்கூடிய பயிற்சி பிரிவுகளாகும். செவிலியம் என்பது "பழமையான கலை மற்றும் தொழில்களில் முதன்மையானது" என டானோபே 1985 கூறுகிறார். செவிலியக்கல்வி சார் கலைத்திட்டம் பிறநலத்துறை சார்ந்த தொழில் வல்லுநர்களுக்கு அடித்தளமாக அமைவதுடன் சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவக்கூடியதாக உள்ளது.

செவிலியக் கல்வி என்பது செவிலிய மனிதவள மேம்பாட்டின் உற்பத்தி கூறு. செவிலியக்கல்வி, சுகாதார மேம்பாட்டு துறைகளில் உள்ள அனைத்து துறை தொழில் வல்லுநர்களின் கல்வியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

அறிவுசார் கற்றல், கற்பித்தல், நன்னடத்தை மற்றும் தொழில் சார் திறனில் செவிலியர் மேம்பட்டிருக்க வேண்டும். ஆதலால் செவிலியக் கல்வியின் நோக்கம் செவிலிய திறன் மேம்பாடு, தொழில்சார் அறிவு, நன்னடத்தை மற்றும் அழகுணர்வை மேம்படுத்துவதாகும்.

செவிலியரின் ஆளுமை வளர்ச்சி மேம்பாட்டால் தான் (உடல், அறிவு சமூக உணர்வு சார், ஆன்மீகசார், அழகுணர்வு சார் திறன்கள்) எல்லா வயதினருக்கும் தேவையான தொழில்சார் பாதுகாப்பினை வழங்குவதோடல்லாமல், எல்லா நிலையிலும் (ஆரோக்கியத்தைப் பேணுவதிலும், நோயுள்ள நிலையிலும்) எல்லா சூழ்நிலையிலும், மிகச் சிறந்த முறையில் பாதுகாப்பு அளிக்க முடியும்.

## கல்வியின் வரையறை

கல்வியின் நோக்கம், குழந்தையின் உடல், மனம், மற்றும் ஆன்மா சார்ந்த முழுமையான திறன்களை வெளிக்கொணர்வதே

**– மகாத்மா காந்தி**

கல்வி என்பது மனிதனின் உள்ளார்ந்த திறன்களின் இயல்பான இணக்கமான தொடர் வளர்ச்சி

**– பெஸ்ட்லோசி**

## செவிலியக் கல்வியின் தத்துவம்

செவிலிய தத்துவம் என்பது பரந்த நோக்கில் மனிதனின் நம்பிக்கை மற்றும் நன்மதிப்பையும், சிறப்பு நோக்கில் கற்பவராக ஆசிரியராக, செவிலியராக வாடிக்கையாளராக இருப்பதோடு உடல் நலம், ஆரோக்கியமின்மை, செவிலியம் மற்றும் கற்றல் இவற்றின் மீதுள்ள நம்பிக்கையும் உள்ளடக்கியது.

கல்வியை மேம்படுத்துவதுடன் மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்கான முறைகளை கண்டறிவதுடன் கலைத்திட்டம் தரம் மேம்படவும் உதவுகிறது.

## வரையறை

இயற்கையின் ஒரு விரிவான பார்வை மற்றும் இயற்கை தத்துவத்தை விளக்கும் ஓர் முயற்சி

**பீச்டீ–** தத்துவம் என்பது அறிவியல் அறிவு

**கோலோசிட்ஜ்–** தத்துவ அறிவியல் அனைத்து அறிவியலிலும் மேம்பட்டது.

**சிசரோ–** தத்துவம் என்பது கலைகளின் தாயாகவும் மனதிற்கு உண்மையான மருந்தாகவும் உள்ளது.

## 12.1 செவிலியக் கல்வியின் வரையறை பிற செவிலியக் கொள்கைகள்


**செவிலிய கல்வியின் கொள்கைகள்**

**பாதுகாப்பு (Caring):** பிறரை பாதுகாப்பதற்கு முன் சுயபாதுகாப்பு மிகவும் அவசியம்.

**நேர்மை (Integrity):** ஒருவர் தனது செயலிற்கு பொறுப்பேற்றுக் கொள்வதுடன் அதனை நேர்மையாகவும் உண்மையாகவும் தகவல் பரிமாற்றம் செய்ய வேண்டும்.

**பன்முகத்தன்மை (Diversity):** கல்வியில் பன்முகத்தன்மையை அங்கீகரித்தலோடு நில்லாமல் பன்முகத்தன்மையின் பின்னணி மற்றும் அனுபவங்களையும் அறிதல்.

**உயர்வு (Excellence):** தொழில்முறை வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் ஆகியவற்றில் ஈடுபடுவதன் மூலம் உயர்வு அடைய முடியும்.




**பிற கொள்கைகள்**

1. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையேயான தொடர்பினை ஊக்குவித்தல்.
2. மாணவர்களிடையே முரண்பாடுகளைக் களைந்து அவர்களிடம் நிலவும் ஒத்துழைப்பை வளர்த்தல்.
3. செயல்முறை கற்றலை ஊக்குவித்தல்.
4. சரியான கருத்து பின்னூட்டம் வழங்குதல்.
5. பணியில் சரியான நேரத்தை வலியுறுத்தல்.
6. உயர் எதிர்பார்ப்புகளைத் தெரிவித்தல்.
7. பலவிதமான திறமைகள் மற்றும் கற்றல் வழிகளை மதித்தல்.

## 12.2 செவிலியக் கல்வி தத்துவத்தின் வரையறை

செவிலிய கல்வியின் தத்துவம் என்பது நம்பிக்கை, மதிப்பு, மனப்பான்மை மற்றும் சிந்தனை ஆகியவற்றை கல்வியாளர்கள் ஒரு குழுவாக ஏற்று செவிலிய கல்வி திட்டங்களில் தொடர்புபடுத்துவதாகும். (உ.ம்) உடல்நலம், நோய், செவிலிய தொழில், கற்பவர் சமூகம், நோயாளி பற்றிய கற்றல் மற்றும் செவிலியர் தயார்நிலை.

## தத்துவம் மற்றும் கல்விக்கு இடையே உள்ள தொடர்பு

| தத்துவம் | கல்வி |
|---|---|
| 1. சிந்தனை, கோட்பாடு, இலக்கு, தரம், மதிப்புகள் இவை நடைமுறையோடு ஒட்டிய உண்மைத்தன்மை உடையது. | 1. கல்வி தத்துவத்தோடு தொடர்புடைய நன்மதிப்பை மேம்படுத்துகிறது |
| 2. இது ஓர் கோட்பாடு மற்றும் யூகம் | 2. மனிதனின் கற்றல் முயற்சியால் இலக்குகளை எவ்வாறு அடைவது என்பதை விவாதித்தல். |
| 3. இது ஓர் சிந்தனை சார்பு | 3. இது ஓர் துடிப்பு செயல்முறை |
| 4. கற்பனை சிந்தனையுடன் தொடர்புடையது சூழ்நிலை தொடர்பினை முடிக்கக்கூடியது. | 4. இது ஓர் துடிப்புமிக்க செயல் வடிவம்– மேம்பட்ட தத்துவத்தை செயல்படுத்துதல், நிலைத்தன்மை வாய்ந்தது. |
| 5. இது ஒரு கலை | 5. இது ஒரு அறிவியல் |
| 6. முறைகளை வகுத்தல் | 6. முறைகளை செயலாக்குதல் |

## தத்துவங்களின் இருவகை

| பழமை தத்துவம் | புதிய தத்துவம் |
|---|---|
| இயற்கையியல் | இருத்தலியியல் |
| கருத்தியியல் | முன்னேற்றயியல் |
| நடைமுறையியல் | நடத்தையியல் |
| உண்மையியல் | மனித நேயவியல் |
| | ஆய்வியல் |
| | தேர்வியல் |
| | மறுசீரமைப்பியல் |

## பழமை தத்துவம்

### இயற்கையியல் (Naturalism)

இயற்கையியல் என்பது இயற்கையின் விதிகளும், ஆற்றல்களுமே அண்டத்தை இயக்குகின்றன என்றும், அதை மீறி எதுவும் இல்லை என்ற நிலைப்பாடு ஆகும்.

இயற்கையியலாளர், இயற்கையே அனைத்துமானது இயற்கையைவிட உயர்ந்தவை எதுவும் இல்லை என கருதுகின்றனர். மனிதன் இயற்கையின் ஒரு குழந்தை என்று கருதப்படுகிறான்.

நமது உயிரியல் செயல்கள் உணர்வியல் செயல்கள் மற்றும் சமூக செயல்கள் அனைத்தும் நமது உணர்வினால் தொடங்கப்படுகிறது. செயற்கைத் தன்மையிலிருந்து விடுபட்டு இயற்கைத் தன்மைக்கு திரும்ப வேண்டியதன் அவசியத்தை இயற்கையில் வலியுறுத்துகிறது.

### கருத்தியல் (Idealism)

கருத்தியல் ஒரு பழமையான தத்துவமாகும். மனிதன் ஆன்மீக மற்றும் பொருள்சார் அம்சங்களின் கலவை என கருத்தியல்வாதிகள் நம்புகின்றனர். இவற்றில் ஆன்மீக பார்வையே உண்மையானது மற்றும் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஆன்மா மற்றும் அறிவாற்றல் ஆகியவை பொருளைவிட உயர் மதிப்புடையவை. கருத்துவாதத்தின்படி தனிமனிதனின் அனுபவமே பொருள் சார்ந்த உலகத்தைவிட உயர்வானது. மனிதன் உண்மைகளைவிட கருத்துக்களைச் சார்ந்தே வாழ்கிறான்.

### நடைமுறையியல் (Pragmatism)

பழமை நடைமுறையியல் கிரேக்கத்தில் தோன்றியது. நவீன நடைமுறையியல் அமெரிக்காவில் உருவானது. சார்லஸ் சாண்டரஸ், பியர்ஸ், வில்லியம் ஜேம்ஸ் மற்றும் ஜான்டுவே ஆகியோர் நவீன நடைமுறைவியியலின் ஆதரவாளர்கள்.

நடைமுறையியல் என்பது கோட்பாடுகளை பயன்படுத்தாமல் நடைமுறை ரீதியில் சிந்திப்பது மற்றும் சிக்கல்களை கையாளுவதாகும்.

### உண்மையியல் (Realism)

உண்மையியல் என்பது நாம் பார்த்து உணரக்கூடியவை மட்டுமே உண்மை. நம் ஐம்புல உணர்வால் கிடைக்கும் அறிவே உண்மையானது.

"உண்மையியல் என்பது நாம் இவ்வுலகை எவ்வித கண்ணோட்டத்தில் காண்கிறோமோ அதுவே பொதுவானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வலியுறுத்தப்படுகிறது."

– பட்டா

## நவீன தற்கால தத்துவம்

### இருந்தலியல் (Existentialism)

இத்தத்துவத்தை 20ஆம் நூற்றாண்டின் நவீன மற்றும் இளைய தத்துவம் என அழைக்கின்றனர்.

**பொருள்:** இருத்தலியல் என்பது மனித அனுபவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற ஒரு தத்துவமாகும். மேலும் ஒவ்வொருவரும் அவரவர் நடவடிக்கைகளின் விளைவுகளுக்கு பொறுப்பாளிகள்.

**ஊகங்கள்**

1. சத்தியம், சட்டங்கள், கோட்பாடுகள் அல்லது சாரம் இவற்றை காட்டிலிலும், மனிதனே வாழ்வின் மையமாகத் திகழ்கின்றான்.
2. மனிதன் உலகில் தனியாக இல்லை மனிதன் ஒரு சமூக உயிரினம்.
3. மனிதன் மீது நிர்பந்திக்கப்பட்டிருக்கும் உன்னத படைப்புகளை மனிதன் ஏற்றுக் கொள்ள முடியாது.
4. மனிதன் தனது சொந்த வாழ்க்கையை வடிவமைப்பதற்கும், தன்னுடைய சொந்த விதியை வடிவமைப்பதற்கும் திறமை உடையவன்.
5. மனிதன் முழுமையானவன் அல்ல. மனிதன் மாறும் சமுதாயத்தின் சவால்களை எதிர் கொள்ளும் திறன் மிக்கவன்.

### முன்னேற்றவியல் (Progressivism)

இது ஒரு அமெரிக்க தத்துவம்: முன்னேற்றவியல் கல்வி இன்றைய வாழ்க்கைக்கு மையமாக உள்ளது.

**பொருள்:** முன்னேற்றவியல் என்பது ஒரு கல்வியில் கோட்பாடு. அது செயல்வழி கற்றலை அடிப்படையாகக் கொண்டது. ஒரு குழந்தை தனக்கு பிடித்தமான மற்றும் திருப்தி அளிக்கக் கூடிய செயல்களை செய்வதன் மூலம் கற்றுக் கொள்ளுகிறது.

### நடத்தையியல் (Behaviourism)

சூழல் தன்மைகளின் முடிவே மனிதனின் நடத்தையை நிர்ணயிக்கிறது. மனிதன் வெளிப்புற தூண்டுதலுக்கு, செயலற்ற பெறுநராக இருக்கின்றான். அவனால் சொந்த விருப்பத்திற்கு ஏற்ப முடிவுகள் எடுக்க முடியாது. அனைத்தும் சூழலுக்கு ஏற்ப தானாக நடக்கக்கூடியது.

**கோட்பாடுகள்**

1. தனிமனிதனின் செயல்கள், அவனின் பரம்பரை (அ) சூழல்களால் முன்னரே தீர்மானிக்கப்பட்டவை.
2. மனிதன் சூழலிருந்து பிரிந்தவனல்ல.
3. மனிதனின் நடத்தையை அவனது படைப்புத் தன்மை கட்டுப்படுத்துகிறது.

**கல்வி பயன்பாடுகள்**

1. மனிதனின் கற்றல் அவனது செயல் மற்றும் எதிர்வினை பல ஊடகங்களினால் நிர்வகிக்கப்படுகிறது.
2. கற்பவருக்கும் சூழலுக்கும் இடையேயான இடைவினையின் விளைவே தனிமனிதக் கற்றலின் வெற்றி.

### மனித நேயவியல் (Humanism)

மனிதனே இறுதியானவன். அவன் பாதை அல்ல.

**கோட்பாடுகள்**

மனித நேயக் கோட்பாட்டாளர்கள் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஒருவர் தனது சமகாலத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைய வேண்டும்.

**கல்வியின் பங்கு**

1. குழந்தைகள் மொழியை மதிக்க கற்றுத்தரப்பட வேண்டும். மொழியின் பூரண தன்மையை உணரச் செய்ய வேண்டும்.
2. குழந்தைகளுக்கு நவீன இலக்கிய தரத்தில் கல்விக் கற்பிக்க வேண்டும்.

### ஆய்வியல் (Experimentalism)

பொருள்கள் அனைத்தும் எப்பொழுதும் மாறிக்கொண்டேஇருப்பவை.எதுசெயலாற்றுகிறதோ அவையே உண்மை என ஏற்றுக்கொள்ளப்படும். பள்ளியின் வாயிலாக குழந்தை தான் வாழும் சமுதாயத்தைப் பற்றிய கருத்துக்களை கண்டு பிடிப்பதுடன் அதனைப்பற்றிய அறிவையும் விரிவுபடுத்துகிறது. குழந்தைகள் சமுகத்தில் ஏற்படும் அனுபவங்கள் வாயிலாக பிரச்சனைகளை தீர்க்க கற்றுக்கொள்கின்றனர்.

மனிதன் ஒரு சமூகவிலங்கு அவன் சூழ்நிலையின் விளைபலன். குழந்தைகள் சோதனைகளின் மூலம் கற்றுக் கொள்கின்றனர்.

### தேர்வுயியல் (Eclecticism)

பல்வேறு தத்துவங்களில் கல்வி தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள பயனுள்ள, அத்தியாவசியமான கருத்துக்களை ஒருங்கிணைப்பது.

**பொருள்:**

1. கல்வி, தத்துவங்களின் கருத்துக்களை இணைத்தல் (அ) தொகுத்தல்.

2. பல்வேறு தத்துவங்களில் உள்ள பொதுவான கருத்துக்களை ஒருங்கிணைத்தல்.

**கல்வி நோக்கங்கள்**

1. குழந்தை, சமுதாயத்தின் திறமையான உறுப்பினராக வேண்டும்.
2. குழந்தைகளிடம் ஆரோக்கியத்தை ஊக்குவித்தல்.
3. திறமையான பயிற்சி வழங்கப்படல்.
4. குழந்தைகளிடம் நல்லொழுக்கத்தை உருவாக்குதல்.

## 12.3 கலைத்திட்டத்தை திட்டமிடுதல் (Curriculum Planning)

'கலைத்திட்டம் (Curriculum)' "Currere" என்ற லத்தின் வார்த்தையிலிருந்து உருவானது. Currere என்பதன் பொருள் "ஓடு". கலைத்திட்டமானது கல்வியின் இலக்குகளை அடைவதற்கான ஒரு ஓடுபாதை ஆகும். கலைத்திட்டமே கல்வி செயல்பாடுகளுக்கான முன்வரைவு ஆகும். கலைத்திட்டம் கற்பித்தல் – கற்றல் செயல்பாடுகளை திட்டமிடவும் நடைமுறைப்படுத்தவும் உதவும் ஓர் அடிப்படை அலகு.

### கலைத்திட்டம்– பொருள்

மாணவர்களுக்கான சில குறிக்கோள்களுடன் சில பாடப்பிரிவுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன

கலைத்திட்டம் என்பது கல்வியின் நோக்கங்களை அடையும் வகையில் பள்ளியிலே செயல்பாடுகளை வடிவமைத்து கற்றல் அனுபவங்களையும் பெறச் செய்ய உருவாக்கப்பட்ட திட்டம்.

### வரையறை

கன்னிக்காம் கூற்றுப்படி "கலைத்திட்டம் என்பது கலைஞன் தன்னிடம் உள்ள பொருளை வடிவமைக்க உதவும் ஓர் கருவி. இவ்வரையரையின்படி கலைஞன் என்பவர் ஆசிரியர் அவரிடம் உள்ள பொருள் என்பது மாணவர்கள். சிந்தனை என்பது கற்றல் நோக்கங்கள், கலைக்கூடம் என்பது கல்விநிறுவனம்".

செவிலிய கலைத்திட்டம் என்பது கற்றல் வாய்ப்புகள் (பொருள்) மற்றும் கற்றல் செயல்பாடுகளை (மருத்துவ அனுபவங்கள் மற்றும் பயிற்சிகள்) உள்ளடக்கியது.ஆசிரியர்,குறிப்பிட்ட மாணவர்களுக்கு, குறிப்பிட்ட காலத்திற்குள் பல்வேறு திட்டங்களை திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தி இலக்குகளை அடையச் செய்யவேண்டும்.

### கலைத்திட்டத்தின் மூன்று அம்சங்கள்

- கல்விக்கான இலக்குகள் மற்றும் நோக்கங்கள்
- கலைத்திட்டத்தின் செயல்முறை
- விளைவினை மதிப்பீடு செய்தல்

### கலைத்திட்டத்தை திட்டமிடுதல் – 4'C

- **கூட்டுறவு** (Cooperative) : பல குழுவினர் இணைந்து வடிவமைக்கும் செயல்திட்டமுறை
- **தொடர்ச்சியான** (Continuous) : செயல் திட்டம் தயாரித்தல் மற்றும் அதனை தொடர்ச்சியாக திருத்தம் செய்தல்.
- **விரிவானது** (Comprehensive) : செயல் திட்டத்தின் அனைத்து கூறுகளும் சேர்க்கப்பட வேண்டும்.
- **உருவுள்ளது** (Concrete) : தொழில் சார்ந்த பணிகள், ஒரு பொருத்தமான செயல்முறை திட்டத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### கலைத்திட்டத்தின் கூறுகள்

- தத்துவம்
- நோக்கங்கள்
- மொத்த காலம்
- விரிவான பயிற்சி திட்டம்
- திட்ட மதிப்பீடு

1. கற்றல் செயல்திட்டங்களை விவரித்தல்
2. கற்றல் செயல்திட்டங்களின் நோக்கங்களை விவரித்தல்.
3. கற்றல் செயல்திட்டங்களின் மொத்த கால அளவு (கோட்பாடு சார்ந்த செய்முறை மற்றும் மருத்துவ கூறுகள்)
4. ஒவ்வொரு பாடத்திற்கும் விரிவான கலைத்திட்டம் அமைத்தல் (வேலைக்கான வாய்ப்பு, கற்றல் வரிசை முறை, கற்றல் சூழ்நிலைகள் மற்றும் கற்பித்தல் முறைகள்)
5. செயல் திட்டங்களை மதிப்பீடு செய்தல் (மதிப்பீடு முறைகள், திட்டமிடல், திட்டமிடலின் அட்டவணை மற்றும் மதிப்பீடுகளின் முடிவுகள்)

### கலைத்திட்ட திட்டமிடுதலின் நிலைகள்

குட்லாண்ட் கலைத்திட்டத்தை மூன்று நிலைகளாகக் குறிப்பிடுகிறார்.

1. சமுதாய நிலை
2. நிறுவன நிலை மற்றும்
3. கற்பித்தல் நிலை

## சமூக கலைத்திட்டம் (Societal curriculum)

பெரிய குழுவிற்கோ, ஓர் வகுப்பு மாணவர்களுக்கோ திட்டமிடப்பட்டுள்ள கலைத்திட்டம் [எ.கா. B.Sc., [N]. கல்வி நிறுவனத்தை தவிர பிற குழுவினரால் கலைத்திட்டம் உருவாக்கப்படுவது [எ.கா. Indian Nursing Council] கலைத்திட்டத்திற்கும் சமுதாயத்தின் தன்மைக்கும் இடையே உறவு உள்ளது.சமுதாயத்தின் தேவைக்கேற்ப கலைத்திட்டம் மாற்றமடையும்.

## நிறுவன கலைத்திட்டம் (Institutional Curriculum)

- ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில், குறிப்பிட்ட கால அளவு நேரத்தை செலவிடும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவ குழுவினற்கு ஆசிரியரால் திட்டமிடப்படுவது.
- குறிப்பிட்ட நிறுவனத்தின் பாடவல்லுநர் குழுவினரால் இணைந்து உருவாக்கப்படும் கூட்டுறவு திட்டம்.
- கலைத்திட்ட வடிவமைப்பில் ஒவ்வொரு ஆசிரியரின் பங்கேற்பும், கலைத்திட்டத்தில் மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் கொண்டு வருகிறது.

பாடத்திட்டத்தின் பொதுவான பண்புகள்

வரிசை

நடைமுறைப்படுத்தல்

## வழிகாட்டி கலைத்திட்டம் (Instructional Curriculum)

மாணவர்களின் பாடக்கருத்துக்களை மற்றும் கற்றல் செயல்பாடுகளை குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும். ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்று திட்டமிடுவது.

## கலைத்திட்டக் குழு

மாணவர்களின் பாடக்கருத்துக்களை மற்றும் கற்றல் செயல்பாடுகளை குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும். ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்று திட்டமிடுவது.

| | |
|---|---|
| மாநிலக் கல்வித்துறை | சட்ட தயாரிப்பாளர்கள் |
| பள்ளி நிர்வாக அதிகாரிகள் | பதிப்பகத்தார்கள் |
| கலைத்திட்ட நிர்வாகிகள் | |
| முதல்வர்கள் | திட்ட இயக்குநர்கள் |
| கல்வி ஆராய்ச்சியாளர்கள் | நூலாசிரியர்கள் |
| ஆசிரியக் கல்வியாளர்கள் | சோதனையாளர்கள் |
| சமூகம் | அங்கீகரிப்பவர்கள் |
| பெற்றோர் | கண்காணிப்பாளர்கள் |
| மாணவர்கள் | செல்வாக்கர்கள் |
| பள்ளியில் பணிபுரியாத கல்வியாளர்கள் | கொடையாளர்கள் |

## கலைத்திட்ட உள்ளடக்கத்தினை தரம்பிரித்தல்

1. அத்தியாவசிய (அ) கற்றுக் கொள்ள வேண்டியவை
2. விரும்பத்தக்கவை (அ) பயனுள்ளவைகளைக் கற்றல்
3. ஆதரவானவை (அ) கற்றலுக்கு இனிமையானவை

## கலைத்திட்ட வளர்ச்சியின் கொள்கைகள்

1. பழமைவாத கொள்கைகள்: சமூகத்தின் தற்போதைய, கடந்த கால மற்றும் எதிர்கால தேவைகளை கருத்தில் கொள்ளுதல்.
2. முன்னோக்கி பார்க்கும் கொள்கைகள்: இன்றைய குழந்தைகள் நாளைய குடிமக்கள்.
3. படைப்புக் கொள்கைகள்: குழந்தையின் படைப்பாற்றல் மற்றும் ஆக்கபூர்வமான சக்திகளைக் நடைமுறைப்படுத்த உதவும் ஓர் கருவி.
4. மொத்த வடிவத்தின் கொள்கைகள்: கற்கும் அனுபவமும் கற்கும் வாய்ப்பும் பாடத்திட்டத்தில் உள்ளடக்கி இருக்க வேண்டும்.

5. செயல்பாடுக் கொள்கைகள்: கற்றல் செயல்பாடு மற்றும் கற்றல் அனுபவத்தின் அடிப்படையில் கலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.
6. வாழ்க்கையை தயாரிப்பதற்கான கொள்கைகள்: குழந்தை வளர்ந்தவுடன் குழந்தைக்கான பொறுப்புகளை நிறைவேற்ற உதவுதல்.
7. வாழ்க்கையை தொடர்புபடுத்தும் கொள்கைகள்: கலைத்திட்டம் பயனுள்ள வாழ்க்கை அனுபவங்களை வழங்க வேண்டும்.
8. குழந்தையின் மைய கலைத்திட்டம்: மாணவர்களின் வயது, கல்விநிலை, தேவை மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கலைத்திட்டம் வடிவமைக்க வேண்டும்.
9. ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பு கொள்கைகள்: கலைத்திட்டத்தை உருவாக்கும்போது முந்தைய ஆண்டுகளின் கலைத்திட்டத்துடன் ஒருங்கிணைத்து மற்றும் தொடர்புபடுத்தி உருவாக்க வேண்டும். இது தொடர் கற்றலுக்கு அடிப்படையாக அமையும்.
10. புரிதல் மற்றும் சமநிலைக்கான கொள்கை: வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களான, பொருளாதர உறவுகள், சமூக செயல்பாடுகள் மற்றும் வேலை போன்றவற்றை கருத்தில் கொண்டு கலைத்திட்டங்களை வடிவமைக்க வேண்டும்.
11. விசுவாசக் கொள்கைகள்: குடும்பம், பள்ளி, நாடு மற்றும் சர்வதேச சமூகத்திற்கு விசுவாசமாக இருப்பதன் உண்மையான அர்த்தத்தை கற்பிக்கும் விதமாக கலைத்திட்டம் திட்டமிடப்பட வேண்டும்.
12. பலவகையான மற்றும் நெகிழ்வுத் தன்மை கொள்கை: கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாடுகளின் நெகிழ்வுத்தன்மை அளித்தல்
13. சமுதாயத்துடன் இணைக்கும் கொள்கை: கலைத்திட்டம் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக அமைய வேண்டும்.
14. சமூக வாழ்வோடு இணைந்திருக்கும் கொள்கை: கலைத்திட்டமானது சமூக வாழ்வோடு தொடர்பை ஏற்படுத்தக்கூடியதாக அமையவேண்டும்.
15. ஓய்வு நேரத்திற்கான பயிற்சி: இணை பாட செயல்பாடுகள், ஓய்வு மற்றும் நூலக பயன்பாட்டிற்கும் உதவுமாறு அமைய வேண்டும்.
16. முக்கிய (அ) பொதுவான பாடங்களின் கொள்கை : பரந்த அறிவு, வளர்ச்சி, திறமை மற்றும் பாராட்டும் பண்பு வளரும் வண்ணம் கலைத்திட்டம் உருவாக்குதல். (எ.கா) கணிதம், அறிவியல்.
17. முழு ஆளுமை வளர்ச்சிக்கான உடல் மனம் ஆன்மா கலை சார்ந்த கோட்பாடு அபிவிருத்தி கொள்கை: அனைத்து வகையான அனுபவங்களையும் கலைத்திட்டதில் வழங்க வேண்டும்.
18. தொழிலாளர் கண்ணிய கொள்கை: கலைத்திட்டம் எல்லா மாணவர்களிடம் எல்லா வகையான வேலைகள் சார்ந்த ஓர் நேர்மறை அணுகுமுறையை வளர்க்க உதவ வேண்டும்.
19. குண கட்டமைப்பு கொள்கை: கலைத்திட்டம் மனித மற்றும் சமூக மதிப்பீடுகளை ஊக்குவிக்க வேண்டும்.
20. ஜனநாயக, மதச்சார்பின்மை, பொதுநலக் கோட்பாட்டுக் கொள்கை: கலைத்திட்டத்தின் வாயிலாக ஜனநாயக, மதச்சார்பற்ற, பொதுநலக்கோட்பாடு கொள்கைசார்ந்த மாண்பையும் மதிப்பையும் 'பெற்றுக்கொள்ளும் வண்ணம் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
21. சமூக வாழ்க்கையுடன் இணைப்பதற்கான கொள்கை: கலைத்திட்டம் சமூக வாழ்வோடு இயைந்து வாழ வழிவகை செய்ய வேண்டும்.

### கலைத்திட்டத்தின் வகைகள்:

1. முறையான கலைத்திட்டம் (legitimate curriculum)
2. முறையற்ற கலைத்திட்டம் (Illegitimate curriculum)
3. மறைக்கப்பட்ட கலைத்திட்டம் (Hidden curriculum)
4. பயனில்லாத கலைத்திட்டம் (Null curriculum)

## செவிலிய கலைத்திட்டத்தின் மேம்பாடு தொடர்பான கோட்பாடுகள்

- செவிலிய கலைத்திட்டமானது, அடிப்படை அறிவு, திறமைகள் மற்றும் ஆரோக்கியமான மனோபாவத்துடன் கூடிய மாணவர்களை உருவாக்க வேண்டும்.
- கலைத்திட்டம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தெளிவாக இருக்க வேண்டும்.
- சமுதாயத் தேவைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
- கலைத்திட்டம் மாணவர்களிடம் சரியான மனப்பான்மையை உருவாக்க வேண்டும்.
- போதிய போதனை: வகுப்பறை, மருத்துவப்பகுதி மற்றும் சமூக அமைப்புகளில் போதிய கற்றல் மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

- பல்கலைக்கழகங்கள், மதிப்பீட்டுத் துறை மற்றும் சட்டப்பூர்வ சபைகளின் வழிகாட்டுதல்களை கருதில் கொள்ள வேண்டும்.
- உயர்தொழில்நுட்ப மற்றும் உயர் தொடர்பு அணுகுமுறையை செவிலிய கவனிப்பில் உபயோகிக்க வேண்டும்.
- கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் பங்கேற்றல்.
- கற்றல் சூழல் வாழ்க்கை சூழலோடு ஒத்திருக்க வேண்டும்.

## 12.4 செவிலிய / மேலாண்மை

**அறிமுகம்**

மேலாண்மை என்பது கிடைக்கின்ற வளத்தை பயன்படுத்தி முக்கிய நோக்கத்தை அடையக்கூடிய ஓர் அறிவியல் கலை நிர்வாகம் சில கட்டுப்பாட்டினை வலியுறுத்துகிறது. (எ.கா. ஆட்குறைப்பு, செலவினக்குறைப்பு, நேரம் மற்றும் சம்பளக்குறைப்பு, அதிக வேலை நேரம் மற்றும் கண்டறி வினாப்பட்டியல்). நிர்வாகம் மனித வளம் மற்றும் பொருள் வளத்தை ஒன்றிணைப்பதுடன் பணியாளர்களை ஊக்குவித்து நிறுவன நோக்கத்தை அடைய உதவுகிறது. மேலாண்மை அனைத்து சமூக பொருளாதார செயல்களை சார்ந்தது.

### வரையறை

"மேலாண்மை என்பது குழுவில் உள்ள உறுப்பினர்களால் வேலையை செய்து முடிக்க உதவும் ஓர் கலை"

– ஹரோல்ட் கோன்ட்ஸ்

"மேலாண்மை என்பது பொதுவான இலக்குகளை நோக்கி குழுவினர் நடவடிக்கைகளை வழிநடத்தும் செயல் ஆகும்".

– ஜோசப் மாஸ்ஸி

### செவிலிய மேலாண்மை வரையறை

செவிலிய மேலாண்மை என்பது தான் பணிபுரியும் நிறுவன தலைமைத்துவ செயல்பாடுகள் மற்றும் முடிவெடுக்கும் செயல்திறனை செவிலியர் மேற்கொள்ள வேண்டும். திட்டமிடல், ஒழுங்கமைத்தல், பணிவிடை செய்தல், இயக்குதல் மற்றும் கட்டுபடுத்துதல் போன்ற மேலாண்மைக்கான பொதுவான செயல்முறைகளையும் திறனையும் செவிலியர் பெற்றிருக்க வேண்டும்.

### வார்டு நிர்வாகம் என்பது என்ன?

வார்டை நிர்வாகிப்பது என்பது தலைமை செவிலியரின் கடமை ஆகும். அவரே மருத்துவமனையில் செவிலிய நிர்வாக அதிகாரி ஆகவும் செயல்படுவார். நோயாளியை பராமரிப்பதில் செவிலியர் பங்கு, ஒரு நோயாளி மருத்துமனையில் சேர்ந்தது முதல் விடுவிக்கப்படும் வரை (எ.கா) நோயாளியை பாரமரிப்பதில் உதவுதல், மருத்துவர் ரோந்து பணியில் உதவுதல், மருந்து கொடுத்தல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு உதவுதல்.

### சிறப்பான வார்டு நிர்வாகத்திற்கான தங்கமான விதிகள்

1. காலத்தே பணிக்கு வருதல்
2. குறித்து வைத்தல்: அன்றாட நடவடிக்கைகளை குறித்து வைத்தல்
3. கால திட்டமிடல்: பணிக்கு ஏற்ப காலத்தை ஒதுக்கித் திட்டமிடல்
4. **பணி முன்னுரிமை:** அவசர மற்றும் சாதாரண தேவைக்கு ஏற்ப பணி முன்னுரிமை அட்டவணையை செயல்படுத்துதல்
5. **பட்டியலை பின்பற்றுதல்:** பட்டியலில் இல்லாத செயல்களை தவிர்ப்பது, காலத்தை முழுமையாக பயன்படுத்த உதவும்.
6. **முதன்மையான பணிக்கு முன்னுரிமை அளித்தல்:** தான் செய்ய மறுக்கும் செயலை பணிவுடன் மறுத்து சொல்லதிறன் பெறுதல் உயிர் காக்கும் பணிக்கே முக்கியத்தும் அளித்தல்
7. **தேவையான ஓய்வை எடுத்து கொள்ளுதல்:** மன அழுத்தம் ஏற்பட்டுள்ள நிலையால் ஓய்வு எடுத்தல்.
8. **நெகிழ்வு தன்மையுடன் இருத்தல்**
9. **சுய உற்சாகம் செய்து கொள்ளுதல்**

### வார்டு நிர்வாகத்தின் கூறுகள்

- நோயாளிகளை பராமரித்தல்
- பணியாளர்களின் மேலாண்மை
- வார்டை சுத்தமாக பயன்படுத்துதல், சிகிச்சைக்கான சூழலை ஏற்படுத்துதல்.
- உபகரணங்களை விநியோகம் செய்தல்.
- கொள்கைகளையும் செயல்முறைகளையும் நடைமுறைப்படுத்துதல்

## வார்டு மேலாண்மையின் கோட்பாடுகள்

**ஹென்றி ஃபயோலின் மேலாண்மையின் கோட்பாடுகள்**

1. **பணியை பகிர்ந்தளித்தல்/ தொழில் நிபுணத்துவத்தை பாயல் வலியுறுத்துகிறார்.**

- பணிகளை உட்பிரித்தல், பணியை எளிதாக்குவதுடன் திறனையும் மேம்படுத்துகிறது.
- தனிநபரின் பணி வேகம் மற்றும் சரிதன்மையை மேம்படுத்தும்

2. **அதிகாரம் மற்றும் பொறுப்புணர்வு**

- அதிகாரிகளுக்கு முடிவெடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- பொறுப்புணர்வே வேலைகளை முடிக்க காரணம்.
- இவை இரண்டும் சமநிலையோடு இணைந்து செயல்பட வேண்டும்

3. **கட்டளை ஒற்றுமை**

- பணியாளர்க்கு ஒரு நேரத்தில் ஒரு தலைமையிடத்தில் இருந்து மட்டுமே உத்தரவு கொடுக்க வேண்டும்.
- பணியாளர்களுக்கு உத்தரவுகள் பல தலைமைகளிடம் இருந்து பிறப்பிக்கக் கூடாது.
- மேற்கூறிய செயல்களால் தலைமைக்கும், பணியாளர்களுக்கும் இடையே நல்லுறவை மேம்படுத்தலாம்.

4. **இயக்கம் ஒற்றுமை**

- ஒரு தலைமை ஒரு திட்டம் என்றால் ஒத்த நோக்கங்களைக் கொண்ட பல செயல்களுக்கு ஒரு திட்டம் போதுமானது.
- தொடர்புடைய செயல்பாடுகள் குழுவாக இணைக்கப்பட வேண்டும்.
- இந்த கோட்பாடின்படி அனைத்து உறுப்பினர்களின் முயற்சியும் ஒரே பொது இலக்கை நோக்கியதாக இருக்க வேண்டும்.

5. **சமபங்கு**

- பணியாளர்களை, அன்போடும் சமத்துவத்துடனும் நடத்த வேண்டும்
- மேலாளர் பணியாளர்களை நேர்மையாகவும், சமமாகவும் நடத்த வேண்டும்
- ஒரே பதவியில் இருக்கும் பணியாளர் அனைவரையும் ஒன்றுபோல் மரியாதையுடன் நடத்த வேண்டும்
- வயது, சாதி, மதம், உறவு, இனம், பாலினம் அடிப்படையில் ஒதுக்கக் கூடாது

6. **ஒழுங்கு கொள்கை**

- பணியாளர்கள் மற்றும் பொருட்களை ஒழுங்கும் கிரமுமாக வரிசைப்படுத்தி அவற்றிற்கு நிலையான இடத்தை நிறுவனத்தில் ஒதுக்குதல்.
- ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு சரியான உபகரணங்களும் சரியான தொழிலாளர்களும் மிகவும் அவசியம்.

7. **ஒழுக்கம்**

- ஒழுக்கம் என்பது, கீழ்படிதல், அதிகாரிகளை மதித்தல், விதிகளை கடைபிடித்தல், நிர்வாகத்தை ஒழுங்குமுறை படுத்தல் ஆகியவையாகும்.
- பணியாளர்கள் உயர்அதிகாரிகளை மதித்து அவரின் உத்தரவுகளை ஏற்று நடக்க வேண்டும்

8. **முன்முயற்சி கொள்கை**

- பணியாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட பணிகளை முடிக்க முன்முயற்சியெடுக்க உற்சாகப்படுத்த வேண்டும்

9. **ஊதியம்**

- பணியாளர்களுக்கு நியாயமான, சரியான, திருப்திகரமான ஊதியம் வழங்க வேண்டும்
- வாழ்வாதாரம்நிலை பணி நிர்ணயம், நிறுவனத்தின் பொருளாதாரம் இவற்றை வைத்தே ஊதியம் தீர்மானிக்கப்பட வேண்டும்.
- பணியாளர்களுக்கு திருப்தியளிக்கக் கூடிய போதுமான அளவு ஊதியம் வழங்க வேண்டும்.

10. **பணிக்கால உறுதித்தன்மை**

- பணியாளர்களை அடிக்கடி பணியிட மாற்றம் மற்றும் பணியிறக்கம் செய்யக் கூடாது
- பணியாளர் தனக்கான பணியை புரிந்துக் கொண்டு பணியினை சிறப்பாக செய்ய போதிய கால அவகாசம் வழங்க வேண்டும்

11. **உரிய வழிமுறை சங்கிலி**

- அதிகாரி முதல் கடைநிலை பணியாளர் வரையுள்ள தொடர் சங்கிலியின் அமைப்பை உறுதிசெய்ய வேண்டும்.
- எல்லா உத்தரவுகள், வழிகாட்டுதல், தகவல்கள், கோரிக்கைகள், விளக்கங்கள் அனைத்தும் உரிய வழிமுறையில் பயணிக்க வேண்டும்

12. **தனிநபர் விருப்பங்களைத் தவிர்த்து பொது விருப்பங்களை ஏற்றல்**

- நிறுவனத்திற்கு முக்கியத்துவம் அளித்தல்.

- நிறுவன நலன்களுக்காக தனிநபர் நலன்களை தியாகம் செய்தல்
- நிறுவனம் தனிநபரைவிட பெரியது என்ற உணர்வை ஏற்படுத்துதல்
- நிறுவனத்தின் விருப்பங்கள் எப்போதும தனிநபர் விருப்பங்களை விட முக்கியமானது.

13. **ஒற்றுமை உணர்வு**

- ஒற்றுமையே வலிமை
- கூட்டு முயற்சியே நிறுவனத்தின் அடிப்படை
- கூட்டு முயற்சி பணியாளரை கடுமையாக உழைக்க தூண்டுகிறது


14. **மையப்படுத்தல் மற்றும் பிரித்தளித்தல்**

- மையப்படுத்தல்:– இம்முறையில் நிர்வாக தலைமையே பெரும்பான்மையான முடிவுகள் எடுக்க அதிகாரம் கொண்டு இருப்பர்
- பணியாளர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவது பிரித்தளித்தல்:– பணியாளர்களின் பங்களிப்பு குறையுமேயானால். அதனை மையப்படுத்தல் என்பர்
- அதிகாரத்தை கடைநிலை நோக்கி கொண்டு செல்லுதல் தான் பிரித்தளித்தல் ஆகும்

### மேலாண்மையின் அடிப்படை கூறுகள்

மேலாண்மை என்ற சமூக இயக்கத்தின் கூறுகளாவன பொருளாதார பொறுப்புணர்வு, சிறப்பான திட்டமிடல் மற்றும் நிறுவனத்தின் ஒழுங்குமுறை ஆகியவைகளை உள்ளடக்கியது. இது வெவ்வேறு கூறுகள் மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கிய தொடர் செயல்பாடு ஆகும்.

**ஜார்ஜ் மற்றும் ஜெரி – மேலாண்மையின் நான்கு அடிப்படை செயல்பாடுகள்**




### ஹென்றி ஃபயோலின் கூற்றுப்படி – மேலாண்மையின் அடிப்படை செயல்பாடுகள்

- முன்னறிவித்தல் மற்றும் திட்டமிடல்
- நடைமுறைப்படுத்துதல்
- கட்டளையிடுதல்
- கட்டுபடுத்துதல்

**லுதர் கல்லிக் – POSDCORB**

P – திட்டமிடல் (Planning)

O – ஒழுங்குபடுத்துதல் (Organizing)

S – பணியமர்தல் (Staffing)

D – இயக்குதல் (Directing)

C – கட்டுபடுத்துதல் (Controlling)

O – கட்டளையிடுதல் மற்றும் பதிவு செய்தல் (Ordering and Recording)

R – பதிவு செய்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல் (Recording and Reporting)

B – நிதி நிர்வகித்தல் (Budgeting)

## 12.5 சிறந்த நிர்வாகியின் பண்புகள்

1. **தகவல் தொடர்பு திறன்:** தகவல் தொடர்பு திறன், சிக்கல் தீர்க்கும் திறன் மற்றும் கவனிக்கும் திறன் போன்றவை நிர்வாகத்திறன் மேம்பாட்டிற்கு அத்தியாவசியமான திறன்களாகும்.
2. வாடிக்கையாளர் சேவை வாடிக்கையாளர் சார் அணுகுமுறையே சிறந்த நிர்வகத்திறனாகும்
3. காலக்கெடுவின் அடிப்படையில் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, நேரத்தை சரியாக மேலாண்மை செய்வது.
4. கால மேலாண்மை: உரிய நேரத்தில் பணிகளை முடித்தல், விரைவில் முடிக்க வேண்டிய செயல்களுக்கு முன்னுரிமை அளித்தல் இவையாவும் செயலை தொடர்ந்து திறனோடு செய்ய உதவும்.
5. **மனித் மேலாண்மை:** பிறரின் செயலை மதிப்பீடு செய்யவும், பிறருக்கு பணிபகிர்வு செய்யவும் மேலாண்மை பண்பு மிக அவசியம்
6. சார்பு தன்மை மற்றும் நம்பகதன்மை– மந்தனத்தன்மையை பராமரித்தல்
7. நோக்கமுடன் இருத்தல் பணியாளரின் வேலை செய்யும் திறனைக் கொண்டு

முடிவெடுத்தல் அனைவரையும் மரியாதையுடனும் நியாயத்துடனும் நடத்துதல்

8. **ஊக்கமளிப்பவர்:** பணியாளர்களை ஊக்குவித்து, நிறுவனத்தின் தரத்தை மேம்படுத்த, செயல்பட ஊக்குவித்தல்.
9. **நெறிப்படுத்துபவர்:** சிறந்த நிர்வாகி தனித்திருப்பதில்லை பணியாளர்களை நெறிப்படுத்தி, முன்னேற ஊக்கமளிப்பார். பணியாளர்களை பரிவுடன் நடத்தி அவர்களுக்கு என்று தனிப்பட்ட பணிஉண்டு என்று உணர்ந்து செயல்படுபவர்.
10. **நெகிழ்வுதன்மையுடையவர்:** திறந்த மனமுடையவராய், பன்முக ஆளுமையுடன் செயல்படும் தன்மையுடையவர்.
11. **நேர்மறை மனப்பான்மை உடையவர்:** பணியாளர்களை மரியாதையுடனும் பரிவுடனும் நடத்தி பணித்தளத்தில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடியவர்.

## 12.6 சிறந்த மேலாளர்களுக்கான திறமைகள்

**மூன்று அடிப்படை திறமைகள்**

1. தொழில்நுட்பத் திறன்
2. மனிதத் திறன்
3. கருத்தியல் திறன்

**1. தொழில்நுட்ப திறன்**

தொழில் நுட்பம் என்பது பொருட்களோடு வேலை செய்தல். ஓர் சிறப்பான செயல்பாட்டினை நடைமுறைப்படுத்த செயல்முறை, தொழில் நுட்பம் ஆகியவற்றை வடிவமைக்கத் தேவையான புரிதலும், திறனும் அவசியம். தொழில் நுட்பத்திறன் என்பது துறைசார் மேம்பட்ட அறிவு ,கணித அறிவு, கருவிகளை இயக்கும்திறன் மற்றும் துறைக்கான பிரத்தியேகத் திறன் வளர்த்தல்.

**2. மனித திறன்**

மனிதவளத்திறன் என்பது மனிதர்களோடு வேலை செய்வது குழு உறுப்பினரிடம் குழு மனப்பான்மையை ஏற்படுத்தி குழுவின் செயல்களை முன் நகர்த்திச் செல்லுதல்.

**3. கருத்தியல் திறன்**

நிறுவனத்தை ஒன்றாகப் பார்ப்பது ஒரு நிறுவனத்தில் நடைபெறும் செயல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதையும் அவை ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்புடையது என்பதையும் ஓர் துறையில் மாற்றம் பிற துறையை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் அறிய வேண்டும். கருத்தியல் திறன் மிகுந்திருந்தால் மட்டுமே முடிவெடுக்கும் திறன் சிறப்பானதாக இருக்கும்.

## 12.7 செவிலியரின் நீட்டிக்கப்பட்ட பராமரிப்பு (அ) பணி

1. பராமரிப்பாளர்
2. மேலாளர்
3. ஆலோசகர்
4. கற்பிப்பவர்
5. வழக்கறிஞர்
6. ஆராய்ச்சியாளர்
7. ஒருங்கிணைப்பாளர்
8. பள்ளி சுகாதார செவிலியர்
9. பணியிட சுகாதார செவிலியர்
10. தனி பணி செவிலியர்
11. திருச்சபை செவிலியர்
12. பொது சுகாதார செவிலியர்
13. வீட்டு பராமரிப்பு செவிலியர்
14. நல்வாழ்வு செவிலியர்
15. மறுவாழ்வு செவிலியர்
16. அலுவலக செவிலியர்
17. நோய் தடுப்பு செவிலியர்
18. ராணுவ செவிலியர்
19. விண்வெளி செவிலியர்
20. வலைதொடர்பு செவிலியர்
21. பேரிடர் செவிலியர்
22. சிறைசாலை செவிலியர்
23. தடயவியல் செவிலியர்
24. அமைதி பணி செவிலியர்
25. தகவல் பரிமாற்ற செவிலியர்

Z15N8

### பிறபணிகளில் செவிலியரின் பங்கு

செவிலியர் தாங்கள் பராமரிக்கும் நோயாளி தினசரி வேலைகளைச் செய்வதற்கு உதவுதல், அவர்களை பராமரித்து மறுவாழ்விற்கான செயல்களை ஒருங்கிணைத்தல், செவிலியருக்கு முழு சுதந்திரமும் கடமைகளும் உண்டு. அவர்கள் மருத்துவமனையிலும் சமுதாயத்திலும் பணிபுரிவர்.

**1. பராமரிப்பாளர்**

பராமரிப்பது செவிலியரின் முதன்மைப் பணியாகும். பராமரிப்பு என்பது ஓர் அறிவியல் மற்றும் கலை. மேலும் நோயாளி உடல்நலம் பெற்று ஆரோக்கியம் பெறும் வரை, பராமரித்தல், நோயாளி மற்றும் அவரது குடும்பத்தினர்க்கு நோக்கங்களை

அமைத்து அந்நோக்கங்களை குறைந்த நேரம் மற்றும் ஆற்றல் செலவில் முடிக்க உதவுபவர்.

**2. மேலாளர்**

செவிலியர் சுகாதாரக பராமரிப்பு குழுவில் உள்ள பிற நபருடன் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவர் (உ.ம்) உணவூட்ட நிபுணர், உடலியக்கவியளாளர்

**3. பாதுகாவலர் மற்றும் வழக்கறிஞர்**

நோயாளிக்கு உரிய பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க உதவுபவர் நோயாளிக்கு காயங்கள் ஏற்படாமல் தடுப்பதுடன், நோயாளிஞக்கு வழங்கப்படும் சிகிச்சை மற்றும் கண்டறிதலினால் ஏற்படும் பிரச்சனைகளைத் தடுத்தல், நோயாளியின் உரிமையை பாதுகாப்புடன் அவர்களின் உரிமையை நிலைநாட்டவும் உதவுதல்.

**4. ஆலோசகர்**

நோயாளி மற்றும் அவரது குடும்பத்தினர் சந்திக்கும் மன வேதனையான நிலையை சமாளிக்க உதவுபவர். உணர்வு ரீதியான மற்றும் உடலியல் ரீதியான பாதுகாப்பு அளிப்பவர். நோயாளியை ஊக்குவித்து மாற்று நடத்தையை பின்பற்ற உதவுபவர்.

**5. சிறப்பு ஆலோசகர்**

பிரச்சனைகளைக் கண்டறிந்து அதற்கு தீர்வு காண முயற்சிப்பவர்.

**6. கல்வியாளர்**

நோயாளி, அவரது குடும்பத்தார் மற்றும் சமூகத்தினர்க்கு நோயைப்பற்றிய தெளிவை ஏற்படுத்துபவர்.

**7. இணைப்பவர்**

செவிலியர் பராமரிப்பு குழு உறுப்பினர்களை இணைத்து நோயாளியை பராமரிப்பவர். செவிலியருடம் குழு உறுப்பினரும் இணைந்து செயல்பாடுகளை வடிவமைத்து நோயாளியை கவனிப்பவர்.

**8. பள்ளி நல செவிலியர்**

மாணவர்கள் ஆரோக்கியமாக இருக்க, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நோய் தடுப்பு வழிமுறைகளை கற்பிக்க உதவுபவர்.

**9. தொழிலாளர் நல செவிலியர்**

தொழில்சாலையில் பணிபுரிவோர் மற்றும் சிறப்பு சமுதாய குழுவினரிடையேயும் உடல்நலம் காக்க உதவுபவர்.

**10. திருச்சபை செவிலியர்**

ஒத்த நம்பிக்கையுடையோர் கூடுகையில் (இந்து, முஸ்லீம் மற்றும் கிறிஸ்துவ) ஆரோக்கியம் மற்றும் நலத் தேவைகளை பராமரிப்பவர்.

**11. பொது சுகாதார செவிலியர்**

பதிவு செய்துள்ள செவிலியர் சமூக நல வாழ்விற்கான சிறப்பு பயிற்சி பெற்றவர். நோயாளி, அவர்கள் குடும்பத்தினர்க்கு நலவாழ்வு மற்றும் வாழ்வியல் தொடர்பான பயிற்சி வழங்குபவர்.

**12. தனி பணி செவிலியர்**

வீட்டில் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவர் அறிவுரைப்படி பராமரிப்பவர்.

**13. வீட்டு பராமரிப்பு செவிலியர்**

நோயாளி மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு சென்றவுடன், மருத்துவர் ஆலோசனைப்படி ஏற்ற சூழ்நிலையில் நோயாளியை பராமரிப்பவர்.

**14. நலவாழ்வு செவிலியர்**

நோயாளியின் இறுதி கால கட்டத்தில் வீட்டில் பாதுகாப்புடன், சுயமாக, மரியாதையுடன், வாழ வழிசெய்து நோயினால் ஏற்படும் கஷ்டத்தை போக்குபவர்.

**14. மறுவாழ்வு செவிலியர்**

உடல் குறைபாடுடையோர் மற்றும் நாட்பட்ட நோயில் உள்ளோர்க்கு சிறப்பு பயிற்சியளித்து குறைந்தபட்ச செயல்பாட்டிற்கு கொண்டுவர உதவுபவர்.

**16. அலுவலக செவிலியர்**

சிறப்பு மருத்துவமனை மற்றும் பொதுநல மருத்துவமனை மற்றும் அவசர உதவி பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பவர்.

**17. நோய்தடுப்பு செவிலியர்**

தொற்றுநோய்க்கான ஆய்வு மேற் கொண்டு தொற்று நோயை தடுத்தல் மற்றும் கட்டுக்குள் வைத்தல் போன்ற செயலை மேற்கொள்பவர்.

**18. இராணுவ செவிலியர்**

இராணுவ வீரர்களுக்கு பராமரிப்பு வழங்குபவர்

**19. விண்வெளி செவிலியர்**

விமான பயணியர்களுக்கு பராமரிப்பு வழங்குபவர்.

**20. வலைதொடர்பு செவிலியர்**

தொலைபேசியில் நோயாளிகளுக்கு மருத்துவ பராமரிப்பு வழங்குபவர்.

**21. பேரிடர் செவிலியர்**

பேரழிவின் போதும் மற்றும் அதன் பின்னும் சேவை வழங்குபவர்.

**22. சிறைச்சாலை செவிலியர்**

சிறையில் இருக்கும் நோயாளிகளுக்கு பராமரிப்பு வழங்குதல். அவர்களின் மனநலம் மேம்பட பாடுபடுபவர்.

**23. தடயறிவியல் செவிலியர்**

தடயப்பொருட்களை கையகப்படுத்தி பாதுகாத்தல்.

**24. அமைதி பணி செவிலியர்**

உலகின் தொலைதூர பகுதிகளில் போர் நிறுத்தம் நடைபெற்ற இடங்களில் வேலை செய்பவர்.

**25. தகவல்தொடர்பு செவிலியர்**

தகவல் தொடர்பு மற்றும் பரிமாற்றம் என்பது செவிலியத்தின் ஒருங்கிணைந்த செயலாகும் நோயாளி, பாதுகாவலர், சுகாதார அலுவலர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள நபர்களிடம் கருத்து பரிமாறுபவர்.

## 12.8 செவிலியரின் விரிவாக்கப்பட்ட பணி (அ) பராமரிப்பு

செவிலியரின் விரிவாக்கப்பட்ட பணி என்பது விரிவுபடுத்தப்பட்ட அல்லது அதிகரித்த பொறுப்புகளை உள்ளடக்கியதாகும். பெரும்பாலான சூழ்நிலைகளில் செவிலியர் சுயமாக பணியாற்றுகின்றனர்.

1. மேம்பட்ட செவிலிய பயிற்சியாளர்
2. மருத்துவ செவிலிய நிபுணர்
3. செவிலிய நிர்வாகி
4. மயக்கவியல் செவிலியர்
5. செவிலிய ஆராச்சியாளர்
6. செவிலிய கல்வியாளர்
7. செவிலிய தொழில்முனைவோர்
8. கடுமையான பராமரிப்பு செவிலிய பயிற்சியாளர்
9. அறுவை அரங்க செவிலியர்
10. நிபுணத்துவ செவிலிய பாதுகாப்பு மேலாளர்
11. மறுவாழ்வு செவிலியர்
12. செவிலிய ஆய்வாளர்
13. சுற்றுலா செவிலியர்
14. புற்றுநோய் சிறப்பு செவிலியர்
15. விளையாட்டு செவிலியர்
16. செவிலிய ஆசிரியர்கள்
17. தொடர்பு செவிலியர்
18. விண்வெளி செவிலியர்
19. நல்வாழ்வு செவிலியர்
20. பள்ளி சுகாதார செவிலியர்
21. கப்பல் செவிலியர்
22. வழக்கறிஞர்
23. பேரிடர் செவிலியர்
24. தொற்றுநோய் செவிலியர்

1. **மேம்பட்ட செவிலிய பயிற்சியாளர்:** இவர் ஓர் சிறப்பு செவிலியர் சுகாதார பராமரிப்பு முகவரிடம் பதிவு செய்து நெடுநாள் நோய்வாய்ப்பட்ட நோயாளிகளைப் பராமரிப்பவர்.
2. **மருத்துவ செவிலிய நிபுணர்:** முதுநிலை செவிலியம் முடித்து சிறப்பு துறையில் அனுபவம் பெற்றிருப்பர். இவர்கள் ஆரம்ப சுகாதார நிலையம், மறுவாழ்வுமையம் மற்றும் சமூக சார் நிலையங்களில் பணிபுரிவர்.
3. **செவிலிய நிர்வாகி:** நோயாளியை பராமரித்தல் மற்றும் சிறப்பு செவிலிய சேவை அனைத்தையும் சுகாதார பராமரிப்பு முகவை மூலம் நடத்துகின்றனர்.
4. மயக்கவியல் செவிலியர்: அறுவை சிகிச்சைக்கு முன், பின், மற்றும் அறுவை சிகிக்கையின் போதும் மயக்கவியல் நிபுணருக்கு அறுவை சிகிச்சையின் போது உதவுபவர்.
5. சிறப்பு செவிலிய கல்வியாளர்: செவிலியத்தின் ஏதேனும் ஒரு துறையில் சிறப்பு நிபுணத்துவம் பெற்றிருப்பர்
6. செவிலிய ஆராய்ச்சியாளர்: தகவல் சேகரித்தல் மற்றும் ஆய்வை சிறப்பாக முடிப்பவர்
7. நாட்பட்ட நோயாளியை பராமரிக்கும் செவிலியர்: இறுதிநிலையில் உள்ள நோயாளிகளை பராமரித்தல் மற்றும் அவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துதல்
8. செவிலிய தொழில் முனைவோர்: செவிலியர் ஓர் தொழில் முனைவோராக செயல்படுவர் பிறர் உதவியின்றி செவிலியர் பராமரிப்பு வழங்குபராகவும் ஆலோசகராகவும் மற்றும் கல்வி ஆராய்ச்சியாளராகவும் பணிபுரிதல்.
9. அறுவை அரங்க செவிலியர்: அறுவை சிகிச்சை அரங்கிற்கு நுழைவதில் இருந்து, அறுவை சிகிச்சையின் போதும் சிகிச்சைக்கு முன் பின் நோயாளிகளை கண்காணித்தல் மற்றும் பராமரிப்பு வழங்குதல்.
10. நிபுணத்துவ செவிலிய பாதுகாப்பு மேலாளர்: நோயாளிகளை மதிப்பீடு செய்து அதற்கு ஏற்ற தரத்திலும் செலவினம் அடிப்படையிலும் பராமரிப்பு வழங்குதல்
11. செவிலியர் ஆய்வாளர்: செவிலியர் நோயாளிகளின் தகவல்களை சேகரித்து பகுப்பாய்வு செய்தல்
12. பயண செவிலியர்:
13. புற்றுநோய் செவிலியர்: புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை கவனித்தல்
14. விளையாட்டு செவிலியர்: விளையாட்டு மருத்துவம், எலும்பு பிரிவு மருத்துவத்தின் ஓர் உட்பகுதியாகும். பயிற்சியின் போதோ

விளையாட்டின்போதோ ஏற்படும் காயங்களுக்கு செவிலியர் பராமரிப்பு வழங்குதல்

15. செவிலிய ஆசிரியர்: செவிலியர் பாடநூல் அமைப்பதிலும், பயிற்சியளிப்பதிலும், ஆராய்ச்சி கல்வியிலும் ஈடுபடுதல். விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு செவிலிய பராமரிப்பு வழங்குதல்

16. தொடர்பு செவிலியர்: செவிலியர் தகவல் தொடர்பு பிரிவில் பெரும் பங்கு வகிக்கின்றனர். இவர் நோயாளிக்கும் மறுவாழ்வளிக்கும், நபருக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.

17. நல்வாழ்வு செவிலியர்: நோயாளியின் இறுதிகட்ட வாழ்நாளில், அவர்களுக்கு உடல் நலம், மனநலம் மற்றும் இறைபற்றுசார் கவனிப்பு ஆகியவற்றை வழங்குவதே நல்வாழ்வு செவிலியரின் முக்கிய நோக்கமாகும். நல்வாழ்வு கவனிப்பு வாழ்க்கை தரத்தை மேம்படுத்துகிறது.

18. **பள்ளி சுகாதார செவிலியர்:** பள்ளி சுகாதார செவிலியர், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உடல் ஆரோக்கியம் மற்றும் நோய்தடுப்பு பற்றி கற்பிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

19. **தொலை தொடர்பு செவிலியர்:** நோயாளிக்கும் செவிலியருக்கும் இடையே தொடர்புக்கான எல்லை அதிகமாயின் தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் மூலம் மருத்துவ சேவைகளை வழங்குதல்.

20. கப்பல் ஓய்வு விடுதி செவிலியர்: கப்பல் அல்லது ஓய்வு விடுதிகளில், அவசரநிலை மற்றும் பொது பாதுகாப்பு வழங்குதல் இச்செவிலியரின் பணியாகும்.

21. செவிலிய வழக்கறிஞர்: செவிலிய வழக்கறிஞர் சட்ட ஆலோசனை மூலம் சட்டப்பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்

22. பேரிடர் செவிலியர்/ உயிரி தீவிரவாத செவிலியர்: உயிரிதீவிரவாத தாக்குதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அல்லது இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு பகுதிகளில் செவிலியர் பங்காற்றுகின்றனர்.

23. தொற்றுநோய் செவிலியர்: நோய் தொற்று வருவதற்கான காரணங்களை செவிலியர் ஆராய்கின்றனர். இவர் இத்தொற்றினால் பாதிக்கப்படக்கூடிய மக்கள் கூட்டத்தைக் கண்டறிந்து போக்கு, பராமரிக்கப்படவேண்டிய விதம், முக்கியத்துவம் அளிக்கவேண்டிய செயல்கள் ஆகியவற்றைக் கண்டறிவர்.

24. நன்னடத்தை: சட்ட/ நெறிமுறை சிக்கல் பற்றி அறிந்த செவிலியர் நோயாளிக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் சேவைகளை வழங்குகின்றனர்.

உங்களுக்குத் தெரியுமா?

1. தமிழ்நாட்டில் செவிலியக் கவுன்சில் 1926–ஆம் ஆண்டு, தொடக்கப்பட்டது. இந்நிறுவனம் தென்கிழக்கு ஆசியாவிலேய முதன்மையான நிறுவனம் ஆகும்.
2. 1871 –ஆம் ஆண்டில் முதல் செவிலிய பயிற்சி பள்ளி, ஆறு மாத கால செவிலியப் பட்டய படிப்பு, சென்னையில் உள்ள நான்கு அரசு பொது மருத்துவமனையில், மாணவர்களுடன் தொடக்கப்பட்டது.
3. நான்கு ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு 1946 ஆம் ஆண்டில் முதன் முதல் டெல்லியிலுள்ள செவிலிய கல்லூரியிலும் பின் வேலூர், கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையிலும் ஆரம்பிக்கப்பட்டது.
4. செவிலிய பயிற்சி பள்ளியை புனித தாமஸ் மருத்துவமனை இலண்டனில் நிறுவ ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் முன்னோடியாக திகழ்ந்தார்.
5. 1908–ஆம் ஆண்டில் இந்தியாவில் பயிற்சி பெற்ற செவிலியர் சங்கம், செவிலிய தொழிலின் கௌரவத்தையும், மரியாதையையும் நிலைநாட்ட உருவாக்கப்பட்டது.
6. டிசம்பர் 31, 1947, அன்று இந்திய செவிலிய கவுன்சில் உருவாக்க சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி, 1949–இல் இந்த சபை உருவாக்கப்பட்டது.

## பாடச்சுருக்கம்

- ❖ கல்வி என்பது செவிலிய தொழிலின் முக்கிய அம்சமாகும். செவிலிய கல்வி என்பது ஒரு தொழில்முறை கல்வியாகும். இது உணர்வு பூர்வமாகவும், முறையாகவும், திட்டமிடப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது.
- ❖ செவிலியக் கல்வி ஓர் தொழிற்பிரிவு கல்வியாகும். இவை ஒழுங்கும் வரிசையுமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. செவிலியக்கல்வியின் நம்பிக்கை, மற்றும் விழுமங்கள் சார்ந்ததாக உள்ளது.
- ❖ கலைத்திட்டம் கல்வியின் இலக்கை அடைய உதவும் ஒரு ஓடுபாதை ஆகும். கலைத்திட்டம் கல்வி சார் செயல்களுக்கான முன் வரைவு ஆகும்.
- ❖ செவிலிய மேலாண்மை என்பது தலைமையிடத்து செயல்பாடுகள் மற்றும் நிறுவனங்களுக்குள் முடிவெடுக்கும் செயல்திறனை வலியுறுத்துகிறது.
- ❖ மேலாண்மை என்பது ஒரு சமூக செயல்முறையாக விவரிக்கப்பட்டுள்ளது. இது பொருளாதார திறமையான திட்டமிடல் மற்றும் ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டினை கட்டுப்பாடுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- ❖ செவிலியர் நீட்டிக்கப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட சுகாதாரப்பணிகளை செய்கின்றனர்.

## கலைச்சொற்கள் A-Z

| | | |
|---|---|---|
| Profession | – | தொழிற்கல்வி |
| Competency | – | தகுதி |
| Harmonious | – | ஒற்றுமை |
| Aesthetic | – | அழகியல் |
| Diversity | – | பன்முகத்தன்மை |

| | | |
|---|---|---|
| Integrity | – | நேர்மை |
| Philosophy | – | தத்தவம் |
| Curiculum | – | பாடத்திட்டம் |
| Committee | – | குழு |

## மதிப்பீடு

### I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்

1. செவிலிய தொழிலின் அடிதளம்
   அ) கல்வி ஆ) செயல்முறை
   இ) அறிவு ஈ) பொருளாதாரம்

2. பழமையான கலை மற்றும் தொழில்களில் முதன்மையானது செவிலியம் எனக் கூறியவர்
   அ) காந்தி (Gandhi)
   ஆ) அப்துல்கலாம் (Abdul kalam)
   இ) இராஜாஜி (Rajaji)
   ஈ) டோனபூயு (Donabue)

3. ஓர் புதிய கல்வி தத்துவம்
   அ) முன்னேற்றவியல்
   ஆ) நடைமுறைவியல்
   இ) உண்மையியல்
   ஈ) இயற்கையியல்

4. ஒருவர் தனது செயலிற்கு பொறுப்பேற்று அதனை நேர்மையாகவும் உண்மையாகவும் கூறுவதை
   அ) அறிவு
   ஆ) நேர்மை
   இ) தகவல் பரிமாற்றம்
   ஈ) பன்முகத்தன்மை

5. கல்வியின் செய்முறை மற்றும் ஒழுங்கை ஆய்வது
   அ) அறிவு ஆ) தத்துவம்
   இ) கற்றல் ஈ) திட்டமிடல்

6. தத்துவம்
   அ) ஒரு கலை ஆ) ஒரு அறிவியல்
   இ) இரண்டு ஈ) ஏதும் இல்லை

7. கல்வி

அ) ஒரு கலை ஆ) ஒரு அறிவியல்
இ) இரண்டும் ஈ) ஏதும் இல்லை

8. 20ஆம் நூற்றாண்டின் நவீன மற்றும் விவரிக்கப்பட்ட இளைய தத்துவம்

அ) கருத்தியல் ஆ) இருத்தலியில்
இ) நடைமுறையியல் ஈ) ஏதும் இல்லை

9. இன்றைய வாழ்க்கைக்கு மையமாக உள்ள அமெரிக்க தத்துவம்

அ) இருத்தலியல் ஆ) கருத்தியல்
இ) முன்னேற்றவியல் ஈ) ஏதும் இல்லை

10. சூழல் தன்மைகளின் முடிவே மனிதனின் நடத்தை என கூறும் தத்துவம்

அ) கருத்தியல்
ஆ) முன்னேற்றவியல்
இ) நடத்தவியல்
ஈ) ஏதும் இல்லை

## II ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்

1. கல்வி வரையறு
2. செவிலியக்கல்வி வரையறு
3. தத்துவம் வரையறு
4. செவிலியக்கல்வி தத்துவம் வரையறு
5. தத்துவத்தின் வகைகள் யாவை?
6. மனிதநேயவியல் வரையறு
7. கலைத்திட்டம் வரையறு
8. கலைத்திட்டத்தின் மூன்று அம்சங்கள் எவை?
9. கலைத்திட்டத்தின் நான்கு 'c' யை பட்டியலிடுக
10. மேலாண்மை வரையறு

## III விரிவான விடையளிக்கவும்

1. பாடத்திட்டம் வளர்ச்சியின் கொள்கைகளை விரிவாக எழுதுக
2. கல்வியின் பழமை தத்துவத்தை விரிவாக விளக்குக
3. கல்வியின் நவீன தற்கால தத்துவங்களை விரிவாக எழுதுக
4. ஹென்றி ஃபயோலின் மேலாண்மை கோட்பாடுகளை விரிவாக விளக்குக
5. செவிலியரின் நீட்டிக்கப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட பணிகளை விவரிக்கவும்.

## மேற்பார்வை நூல்கள்


1. KP Neeraja, (2009),"Text Book of Nursing Education". JaypeeBrothers Medical Publishers (P) Ltd, New Delhi.
2. ShabeerP.Basheer, s. yaseenkhan (2014)," A concise textbook of Advanced nursing practice1 edition, Emmess medical publishers, page no: 500- 560.
3. Samita (2015)," Text book of advance nursing practice, 1 edition, Jaypee brothers'
4. B.T. Basavanthappa, (2009) "Nursing Administration" 2nd Edition, Jaypee Brothers Medical Publishers (P) Ltd, New Delhi.
5. K.Deepak,"(2010), "Comprehensive Textbook Of Nursing Management" 2nd edition, Emmesspublication,Bangalore.
6. JogindraVati,(2013) "Principles & Practice Of Nursing Management & Administration" Jaypee Brothers Medical Publishers (P) Ltd, New Delhi.
7. Neelam Kumari,(2013) "Nursing Services & Administration" Vikas & Company (Medical Publishers), India.
8. S.Priya,(2013)" Nursing Education"Vora Publication, Mumbai, India


## இணையவளங்கள்


1. medical publishers. https://www.ncbi.nlm.nih.gov/pubmed/1994228
2. http://www.nln.org/centers-for-nursing-education
3. https://careertrend.com/professional-ethics/
4. http://executivesecretary.com/moving-into-management/
5. http://www.jaypeedigital.com/Video/VideoListing